கணிதச்சிறகுகள்

வெளியீடு : 01

தரம் 11 மாணவர்களின் கணித பாட அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான வேலைத்திட்டம்

2020

வெளியீடு
கணிதப் பிரிவு
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.

அனுசரணை : SJC 87 Initiative

தலைப்பு : கணிதச்சிறகுகள்
(தரம் 11 மாணவர்களுக்கானது)

விடயம் : தரம் 11 மாணவர்களின் கணித பாட அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான வேலைத்திட்டம்

முதற் பதிப்பு : 2020 ஆடி

பதிப்புரிமை : கணிதப் பிரிவு, வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

வெளியீடு : வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி

பக்கம் : viii + 116

அச்சுப் பதிப்பு : சிவா பதிப்பகம், கிளிநொச்சி.

அனுசரணை : SJC 87 Initiative

www.lkedu.lk

ஆலோசனையும் வழிகாட்டலும்

திரு.கி.கமலராஜன்

வலயக் கல்விப் பணிப்பாளர்,

வலயக் கல்வி அலுவலகம்,

கிளிநொச்சி

தொகுப்புருவாக்கம்

திரு.த.சுஜீகரன்

உதவிக் கல்விப் பணிப்பாளர் - கணிதம்,

வலயக் கல்வி அலுவலகம்,

கிளிநொச்சி

செவ்வை பார்த்தவர்கள்

திருமதி.த.சிவசோதி

ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் - கணிதம்

திரு.கு.ஜெயகாந்தன்

ஆசிரிய ஆலோசகர் - கணிதம்,

வலயக் கல்வி அலுவலகம்,

கிளிநொச்சி

www.lkedu.lk

வளவாளர் அணியினர்

1. திரு.த.சுஜீகரன்

உதவிக் கல்விப் பணிப்பாளர் - கணிதம்,
வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

2. திரு.கு.ஜெயகாந்தன்

ஆசிரிய ஆலோசகர் - கணிதம்,
வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

3. திரு.வே.ஜெயக்குமார்

ஆசிரியர், கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்

4. திரு.செ.கிருஸ்ணநாதன்

ஆசிரியர், கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்

5. திரு.இ.ஜெயப்பிரகாசம்

ஆசிரியர், கிளி/புனித பற்றிமா றோமன் கத்தோலிக்கப் பாடசாலை

6. திரு.அ.சிவநாதன்

ஆசிரியர், கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலயம்

7. திருமதி.சி.கம்சலா

ஆசிரியர், கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்

8. திரு.க.செல்வராசா

ஆசிரியர், கிளி/விவேகானந்தா வித்தியாலயம்

9. திருமதி.சு.டல்ரின் ஆசா

ஆசிரியர், கிளி/ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை

10. திரு.இ.கஜாணன்

ஆசிரியர், கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

11. திரு.க.அமிர்தாஸ்

ஆசிரியர், கிளி/கோணாவில் மகா வித்தியாலயம்

12. திரு.ஞா.வருணன்

ஆசிரியர், கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

13. திரு.ப.சங்கீர்த்தன்

ஆசிரியர், கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

14. செல்வி.ஜெ.கோகிலா

ஆசிரியர், கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

www.lkedu.lk

வலயக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

கணிதம் தர்க்க ரீதியான சிந்தனையை வளர்க்கின்றது. அறிவு என்னும் நதியை தொடக்கும் ஊற்றுவாயிலாக தர்க்க ரீதியான சிந்தனை அமைகின்றது. இதனாலேயே கல்வி தத்துவவியலாளர் பிளேட்டோ "கேத்திரகணிதம் அறியாதவன் இங்கு நுளையாதிருப்பானாக" என்னும் வாசகத்தினை நுளைவாயிலில் இட்டு வைத்தார்.

இலங்கையின் கல்வி கட்டமைப்பில் கணித பாடத்தின் முக்கியத்துவம் உயர்தரத்தின் நுளைவிலும், வேலைவாய்ப்பு மற்றும் பல்கலைக்கழக நுளைவிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

மாணவர்கள் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடைவதற்கு ஏற்ற வகையில் இக் கைநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இக் கையேட்டினை வடிவமைப்பதற்கு உழைத்த திரு.த.சுஜீகரன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - கணிதம்) மற்றும் அவரது குழுவினருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மாணவர்கள் இந்நூலை பயன்படுத்தி க.பொ.த சாதாரண தர பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொண்டு சித்தியடைவதற்கு அன்பான மாணவர்களுக்கு எனது ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.கி.கமலராஜன்
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்
கிளிநொச்சி

www.ikedu.lk

உதவிக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

கிளிநொச்சி கல்வி வலய மாணவர்களின் க.பொ.த (சா/த) கணித பாட சித்தி வீதத்தை அதிகரிக்கும் முகமாக அத்தியாவசிய கற்றல் எண்ணக்கருக்களை (ELC) அடிப்படையாகக் கொண்டு இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் உள்ள எண்ணக்கருக்களை சரியாக விளங்கி பயிற்சி செய்வதன் ஊடாக அனைத்து மாணவர்களும் இலகுவாக சித்தி பெறலாம்.

இடைநிலைப் பாடசாலை மட்டத்தில் கணித பாடமானது மாணவர்களை அறிவுள்ள பிரசைகளாவதற்கு உதவுவதோடு அவர்களிடம் இயல்பாகவுள்ள ஆற்றல்களை விருத்தி செய்து கொள்வதற்கு உதவுகின்ற பாடமாகக் காணப்படுகின்றது. மேலும் கணித பாடமானது ஏனைய பாடங்களுக்கு உதவும் ஒரு பாடமாக உள்ளது. அத்துடன் க.பொ.த (சா/த) பரீட்சையில் கட்டாயம் சித்தியடைய வேண்டிய பாடங்களில் ஒன்றாக கணித பாடம் காணப்படுகின்றது.

அன்புள்ள மாணவர்களே இந்நூலில் உள்ள எண்ணக்கருக்களை உங்கள் ஆசிரியரின் உதவியுடன் விளங்கி பயிற்சிகளை மீண்டும் மீண்டும் செய்யுங்கள் நிச்சயமாக நீங்கள் கணித பாடத்தில் சித்தி பெறுவீர்கள். இதன் மூலம் க.பொ.த (உ/த) கற்கும் வாய்ப்பை பெற்றுக் கொள்வீர்கள்.

மேலும் இந்நூலை வெளியிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.கி.கமலராஜன் அவர்களுக்கும் வழிகாட்டல்களை வழங்கிய பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் இந்நூலை தயாரிப்பதில் பங்களிப்பு செய்த எமது வலயக்கல்வி அலுவலக கணித பாட ஆசிரிய ஆலோசகர் திரு கு.ஜெயகாந்தன் மற்றும் கணித பாட ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் செவ்வை பார்ப்பதில் உதவிய ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி.த.சிவசோதி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந்நூலை வெளியிடுவதற்கு நிதிப் பங்களிப்பு வழங்கிய **SJC 87 Initiative** அமைப்பினருக்கு எனது உளங்கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

த.சுஜீகரன்
உதவிக் கல்விப்பணிப்பாளர் (கணிதம்)
வலயக் கல்வி அலுவலகம்
கிளிநொச்சி

www.ikeduk

பொருளடக்கம்

அளவீடுகள் 01 - 15

1. ஆரைச்சிறைகள் தொடர்பான கணித்தல்கள்
2. அரியம் உருளை தொடர்பான கணித்தல்கள்
3. தூர நேர வரைபு
4. ஏற்றகோணம், இறக்கக்கோணம்
5. திரிகோணகணிதம் தொடர்பான கணித்தல்கள்

எண்கள்

1. சுட்டியும் மடக்கையும் 16
2. பின்னங்கள் 17
3. கூட்டல் விருத்தி 23
4. வேலையும் நேரமும் 27
5. நேர்மாறு விகித சமன் 29
6. எளிய வட்டி, கூட்டு வட்டி 32
7. பங்குகள் 36
8. வரிகள் 40

கேத்திரகணிதம்

1. ஒழுக்குகள் 44
2. முக்கோணிகள் 46
3. ஒருங்கிசைவு 49
4. வட்டநாண்கள் 51
5. இணைகரங்கள் 53
6. வட்டக்கோணங்கள் 55
7. வட்டநாற்பக்கல் 61
8. மேலதிக பயிற்சிகள் 65
9. நடுப்புள்ளித்தேற்றம் 67

தொடையும், நிகழ்தகவும்

1. தொடைகளும், நிகழ்தகவுகளும் 70 - 83

www.lkedu.lk

அட்சரகணிதம்

1. காரணிகள் 84
2. அட்சரகணித உறுப்புகளின் பொ.ம.சி 86
3. அட்சரகணித பின்னங்களின் அடிப்படைச் செய்கைகள் 88
4. இருபடிச் சமன்பாடுகளின் தீர்வுகள் 89
5. எளிய சமன்பாடுகள் 91
6. தாயங்கள் 93
7. நேர்கோட்டுவரைபுகள் 96
8. ஒருங்கமை சமன்பாடுகள் 98
9. அட்சர கணிதசமனிலிகள் 100
10. பின்னங்களை சுருக்குதல் 101


புள்ளிவிபரவியல் 102 - 115

1. தொடர்மாறி, பின்னகமாறிகள்
2. வட்டவரைபு
3. வலையுருவரையம்
4. தரவுகள் தொடர்பான கணிப்புகள்
5. திரள்மீடிறன் வளையி


பகுதி – IA இற்கான கேத்திர கணித தேற்றங்கள் 116

www.lkedu.lk


அளவீடுகள்

01. 


தரப்பட்ட உருவின் வில்லின் நீளம் யாது?

02. 

தரப்பட்டுள்ள ஆரைச்சிறையின் வில்லின் நீளம் யாது?


03. 

தரப்பட்ட உருவின் சுற்றளவு யாது?


04. 

தரப்பட்ட உருவின் சுற்றளவு யாது?

05. ஆரை 7cm ஆகவும் ஆரைச்சிறைக் கோணம் 90^0 ஆகவும் உள்ள ஆரைச்சிறையின் சுற்றளவு 25cm எனின் வில்லின் நீளத்தைக் காண்க.

06. 


தரப்பட்டுள்ள ஆரைச்சிறையின் சுற்றளவு 39cm எனின் வில் AC இன் நீளம் யாது?

07. 


தரப்பட்ட ஆரைச்சிறையின் வில்லின் நீளம் 11cm உம் அதன் சுற்றளவு 25cm உம் ஆயின் அதன் ஆரையைக் காண்க.

www.lkedu.lk


08. ஓர் ஆரைச்சிறையின் வில்லின் நீளம் 22cm ஆகவும் சுற்றளவு 36cm ஆகவுள்ள உருவின் ஆரையின் நீளத்தைக் காண்க.

09. 


தரப்பட்ட உருவின் பரப்பளவு யாது?

10. 


தரப்பட்ட உருவின் பரப்பளவு யாது?

11. 

தரப்பட்ட உருவின் பரப்பளவு யாது?

12. 


தரப்பட்ட உருவின் பரப்பளவு யாது?

13. 


தரப்பட்ட ஆரைச்சிறையின் பரப்பளவு யாது?

14. 45^0 ஆரைச்சிறைக் கோணத்தைக் கொண்டதும் 14cm ஆரையுடையதுமான ஆரைச்சிறையின் பரப்பளவு யாது?


www.lkedu.lk

15. 


உருவில் உள்ள தரவுகளின் படி ABCDE இன் சுற்றளவைக் காணக.

16. 

உருவில் உள்ள தரவுகளின் படி கூட்டுரு ABCDE இன் சுற்றளவைக் காணக.

17. 

கூட்டுரு PQRS இன் பரப்பளவைக் காணக.

18. 

உரு ABCDE இன் பரப்பளவு யாது?

19. 7cm ஆரையுடையதும் 10cm உயரமுடையதுமான திண்ம செவ்வட்ட உருளையின் மொத்த மேற்பரப்பளவு யாது?

20. 14cm ஆரையுடையதும் 20cm உயரமுடையதுமான திண்ம செவ்வட்ட உருளையின் வளைபரப்பைக் காணக.


www.lkedu.lk

21. ஒரு திண்ம செவ்வட்ட உருளையின் அடியின் ஆரை 7cm ஆகவும் அதன் வளைபரப்பு $880cm^2$ ஆகவும் காணப்படின் உருளையின் உயரம் யாது?


22. திண்ம செவ்வட்ட உருளையின் அடியின் பரிதி 44cm உம் அதன் உயரம் 20cm உம் ஆயின் உருளையின் வளைபரப்பைக் காண்க.

23. திண்ம செவ்வட்ட உருளையின் அடியின் பரிதியின் நீளம் 44cm ஆகவும் அதன் வளைபரப்பு $440cm^2$ உம் ஆயின் அதன் உயரத்தைக் காண்க.

24. உரு I இல் காட்டப்பட்டுள்ள முக்கோண அரியத்தின் வலையுருவானது உரு II இல் காட்டப்பட்டுள்ளது. தரப்பட்ட இடைவெளியில் பொருத்தமான அளவைக் குறிப்பிடுக.




உரு I



..... cm


உரு II

25. முகம் BCDE யினை அளவீடுகளுடன் வரைந்து காட்டுக.



www.lkedu.lk

26. தரப்பட்ட வலையுருவைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் முக்கோண அரியத்தின் முக்கோண முகம் ஒன்றை அளவீடுகளுடன் வரைந்து காட்டுக.



27. ஆரை 7cm ஆகவும் உயரம் 12cm ஆகவும் உள்ள செவ்வட்ட உருளையின் கனவளவைக் காண்க.

28. கனவளவு $616cm^3$ ஆகவும் உயரம் 4cm ஆகவும் உள்ள செவ்வட்ட உருளை வடிவ பாத்திரம் ஒன்றின் ஆரையைக் காண்க.


29. கனவளவு $1540cm^3$ ஆகவும் ஆரை 7cm ஆகவும் உள்ள செவ்வட்ட உருளை வடிவ பாத்திரம் ஒன்றின் உயரத்தைக் காண்க.

30. செவ்வட்ட உருளை வடிவ பாத்திரமொன்றின் வட்ட அடியின் பரப்பளவு $154cm^2$ ஆகும். அதன் உயரம் 10cm எனின் பாத்திரத்தின் கனவளவைக் காண்க.


31. செவ்வட்ட உருளை ஒன்றின் கனவளவு $3080cm^3$ உம் அதன் வட்ட முகத்தின் பரப்பளவு $154cm^2$ உம் ஆகும். உருளையின் உயரத்தைக் காண்க.

www.lkedu.lk

32. உருவில் காட்டப்பட்டுள்ள முக்கோண குறுக்கு வெட்டை உடைய செவ்வரியத்தின் முக்கோண முகத்தின் பரப்பளவு $66cm^2$ எனின் அரியத்தின் கனவளவைக் காண்க.



33. உருவில் காட்டப்பட்டுள்ள முக்கோண குறுக்கு வெட்டை உடைய செவ்வரியத்தின் கனவளவு யாது?




34. சீரான கதியில் செல்லும் பேருந்து ஒன்று 4 செக்கன்களில் 60m தூரம் சென்றது எனின் பேருந்தின் கதியைக் காண்க.

35. வாகனமொன்றின் கதி $60kmh^{-1}$ ஆகும். இவ்வாகனம் 240km தூரம் பயணிக்க எடுக்கும் காலத்தைக் காண்க.

36. நேரான பாதையில் $120kmh^{-1}$ கதியில் செல்லும் வாகனம் 3 மணித்தியாலங்களில் பயணித்த தூரத்தைக் காண்க.


37. அட்டவணையில் தரப்பட்ட தகவல்களுக்கு அமைவாக தூர நேர வரைபை வரைக.

தூரம் மீற்றர் (m)	நேரம் செக்கன் (s)
3	1
6	2
9	3
12	4



www.lkedu.lk

38. பொருள் ஒன்று 6 செக்கனில் இயங்கும் தூரம் உருவில் உள்ள தூர நேர வரைபில் காட்டப்பட்டுள்ளது. அதற்கேற்ப பொருளின் கதியைக் காண்க.




39. ஒரு குழாயினூடாக 5 நிமிடத்தில் 300 லீற்றர் நீர் வெளியேறுகின்றது. நீர் பாயும் வீதத்தை செக்கனுக்கு எத்தனை லீற்றர் எனக் காண்க.

40. 80 லீற்றர் / நிமிடம் எனும் வீதத்தில் நீர் பாய்ந்து வரும் குழாயைப் பயன்படுத்தி 480 லீற்றர் கொள்ளளவுள்ள ஒரு தொட்டியில் நீரை நிரப்புவதற்கு எடுக்கும் நேரம் யாது?


41. ஒரு சீரான விதத்தில் நீர் பாய்ந்து வரும் ஒரு குழாயிலிருந்து 720 லீற்றர் கொள்ளளவுள்ள ஒரு தொட்டியில் நீர் முற்றாக நிரப்புவதற்கு 9 நிமிடம் எடுக்கிறது. குழாயில் நீர் பாய்ந்து வரும் வீதத்தைக் காண்க.

42. பொருளொன்றின் இயக்க இயல்பைக் காட்டும் வரைபைக் கொண்டு அப்பொருளின் கதியைக் காண்க.




www.lkedu.lk

43. AB, XY என்பன கிடைத்தளத்தில் உள்ள இரு நிலைக்குத்து கட்டடங்களாகும். X இலிருந்து அவதானிக்கும் ஒருவருக்கு B இன் ஏற்றக் கோணம் 47^0 உம் உம் A இன் இறக்கக் கோணம் 53^0 உம் ஆகும். இத் தகவல்களை தரப்பட்ட உருவில் குறித்துக் காட்டுக.




44. தரப்பட்ட வரிப்படத்தைக் கொண்டு இடைவெளி நிரப்புக.


Pயில் இருந்து பார்க்கும் போது R இன் இறக்கக் கோணம் ..... ஆகும். Q விலிருந்து P யின் ஏற்றக் கோணம் ..... ஆகும்.




45. உருவில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கமைய $\sin\theta$ இற்கான விகிதத்தைக் காண்க.



46. உருவில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கமைய $\tan\theta$ இற்கான விகிதத்தை எழுதுக.




47. உருவில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கமைய $\cos\theta$ இற்கான விகிதத்தை எழுதுக.




www.lkedu.lk


48. $\sin x = 0.6$ என தரப்படும் போது QR இன் நீளத்தைக் காண்க.



49. $\tan \theta = 0.75$ என தரப்படும் போது உருவில் உள்ள தகவல்களைப் பயன்படுத்தி ON இன் நீளத்தைக் காண்க.



50. $\cos \theta = 0.35$ எனின் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு AC இன் நீளத்தைக் காண்க.




51. முக்கோண செவ்அரியம் ஒன்றின் முக்கோணத்தின் சுற்றளவு 48cm உம் அரியத்தின் நீளம் 50cm உம் எனின் மூன்று செவ்வக முகங்களின் பரப்பளவு யாது?

52. மையக்கோணம் 120^0 உம் ஆரை 21cm உம் உடைய ஆரைச்சிறை ஒன்றை இரு ஆரைகளும் பொருந்துமாறு பொருத்தி (இணைத்து) கூம்பு ஒன்று உருவாக்கப்படுகின்றது எனின் கூம்பின் வளைபரப்பு யாது?

www.lkedu.lk

பகுதி - B


01.



தரப்பட்ட உருவானது 30m நீளமும் 20m அகலமும் கொண்ட செவ்வக வடிவான மைதானமொன்றின் ஒரு முனையில் 14m விட்டம் கொண்ட ஓர் அரை வட்ட வடிவான மேடையொன்று அமைக்கப்பட்டுள்ளது. மேடை தவிர்ந்த பகுதியில் புற்கள் வளர்க்கப்பட்டுள்ளது.

1. அரை வட்ட வில் XY யின் நீளம் யாது?
2. புல் வளர்க்கப்பட்ட பகுதியின் சுற்றளவு யாது?
3. புல் வளர்க்கப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?
4. அரை வட்டப் பகுதியின் விளிம்பு வழியே X இலிருந்து ஆரம்பித்து Y இல் முடிவடையுமாறு 2m இடைவெளியில் மின்குமிழ்கள் பொருத்தப்பட வேண்டியிருப்பதால் பொருத்தப்பட வேண்டிய மின்குமிழ்களின் எண்ணிக்கை யாது?
5. மைதானத்தை விஸ்தரிக்கும் நோக்கில் AD யை ஓர் எல்லையாகக் கொண்டதும் நீட்டப்பட்ட BA யின் மீது ஓர் எல்லை உடையதுமானதும் மைதானப்பரப்பின் 1/4 மடங்கு பரப்பைக் கொண்ட செங்கோண முக்கோணி வடிவிலான காணி ஒன்று அமைக்கப்பட வேண்டியுள்ளது. காணியின் பருமட்டான படத்தினை மேலே உள்ள உருவில் வரைந்து உரிய அளவீடுகளை அதில் குறிக்க.

02.




ABCD என்பது சரிவக வடிவிலான பூந்தோட்ட மாகும் அதன் ஒரு பக்கத்தில் AED எனும் கால் வட்ட (1/4) குளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

1. பூந்தோட்டப் பகுதியின் பரப்பளவைக் காண்க.
2. குளம் அமைக்கப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?
3. உருவின் சுற்றளவு யாது?
4. குளம் அமைக்கப்பட்ட பகுதியின் பரப்பளவிற்குச் சமமாகவும் AE ஐ ஒரு பக்கமாகக் கொண்டு செவ்வக வடிவ பூந்தோட்டம் ஒன்று அமைக்க வேண்டுமெனின் அச் செவ்வகத்தை அளவீடுகளுடன் உருவில் வரைந்து காட்டுக.

www.ikedu.lk


03.



அருகில் உள்ள பூந்தோட்டமானது செவ்வகப் பகுதியையும் EC யை விட்டமாகக் கொண்ட அரை (1/2) வட்டப்பகுதியையும் கொண்டுள்ளது.


1. அரை வட்ட வில் EDC யின் நீளம் யாது?
2. EDC வழியே E யில் ஆரம்பித்து C யில் முடிவடையுமாறு 6m இற்கு ஒரு மின்குமிழ் கம்பம் நடப்பட வேண்டியுள்ளது. நடப்படவேண்டிய கம்பங்களின் எண்ணிக்கை யாது?
3. பூந்தோட்டத்தின் பரப்பளவு யாது?
4. அரை வட்டப் பகுதியின் பரப்பளவிற்குச் சமனான பரப்பைக் கொண்ட செவ்வகப் பகுதியொன்று ஓர் எல்லை AB ஆகக் கொண்டு மைதானத்துடன் சேர்க்கப் படுகின்றது. சேர்க்கப்படும் பகுதியின் அகலத்தைக் கண்டு அதனை தரப்பட்ட உருவில் பருமட்டாக வரைக.

04. ABCD எனும் செவ்வக அடரிலிருந்து AED எனும் ஆரைச்சிறை வெட்டி அகற்றப்படுகிறது.




1. ADE என்ற ஆரைச்சிறையின் ஆரை யாது?
2. உரு ABCDE சுற்றளவு யாது?
3. உரு ABCDE பரப்பளவு யாது?
4. ஆரைச்சிறைப் பகுதி ADE வெட்டி அகற்றப்படுவதற்கு பதிலாக அதற்கு சமபரப்புடைய செங்கோண முக்கோணி BCF ஆனது BA யின் மீது F அயுமாறு வெட்டப்படிருப்பின் அதனை வரிப்படத்தில் குறித்து BF இன் நீளத்தைக் காண்க.

www.lkedu.lk

05. 

உருவில் செவ்வக வடிவிலான ஒரு காணியின் பரும்படிப் படம் தரப்பட்டுள்ளது. காணியின் அகலம் 14m உம் நீளம் அகலத்தின் இரு மடங்காகவும் காணப்படுகின்றது. ஆரைச்சிறை AEFD யில் மரக்கறி பயிரிடப்பட்டிருப்பதோடு எஞ்சிய பகுதியில் வாழை பயிரிடப்பட்டுள்ளது.

1. காணியின் பரப்பளவு யாது?
2. மரக்கறி பயிரிடப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு யாது?
3. மரக்கறி பயிரிடப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவு யாது?
4. மரக்கறி பயிரிடப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவுக்குச் சமனாக அமையுமாறும் செங்கோண முக்கோணி வடிவிலான காணிப்பகுதி ABG இதனோடு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அக் காணியை அளவீடுகளுடன் அதேயுருவில் வரைந்து காட்டுக.

06. 

ABDE எனும் சதுர வடிவ பகுதியையும் ஆரைச்சிறைக் கோணம் 90^{0} ஆகவுள்ள ஆரைச்சியையையும் கொண்ட நிலத்தின் ஒரு பகுதி உருவில் காட்டப்பட்டுள்ளது.


1. DC என்ற வில்லின் யாது?
2. BCD என்ற ஆரைச்சிறையின் பரப்பளவு யாது?
3. உருவின் சுற்றளவு யாது?
4. ஆரைச்சிறையின் விளிம்பு வழியே C யில் ஆரம்பித்து வில்லின் வழியே D இல் முடிவடையுமாறு 2m இடைவெளியில் கம்பங்கள் நடப்பட வேண்டியுள்ளதால் தேவையான கம்பங்களின் எண்ணிக்கை யாது?
5. ஆரைச்சிறையின் பரப்பளவின் 1/4 பங்கு பரப்பளவைக் கொண்டதும் AB ஐ எல்லையாகக் கொண்டதுமான செங்கோண முக்கோண காணியை கொள்வனவு செய்ய வேண்டியிருப்பதால் அக் காணியின் பரும்படிப்படத்தை அளவீடுகளுடன் வரைந்து காட்டுக.

www.lkedu.lk

07. தூர - நேர வரைபு தொடர்பான அட்டவணை வருமாறு.

நேரம் (s)	20	40	60	80	100
தூரம் (m)	10	20	30	40	50

1. மேற்படி இயக்கத்திற்கா தூர நேர வரைபை வரைக.




2. வரைபின் படித்திறன் யாது?

3. மேற்படி இயக்கத்தின் சீரான கதியைக் காண்க.

4. மேற்படி சீரான கதியில் 10 நிமிட நேரத்தில் செல்லும் தூரம் யாது?

5. மேற்படி சீரான கதியில் 1/2km தூரம் செல்வதற்கு எடுக்கும் நேரம் யாது?

08. ரவி தனது துவிச்சக்கரவண்டியில் நூல் நிலையத்திற்குச் சென்று பத்திரிகை வாசித்து விட்டு தனது நண்பனின் வீட்டிற்குச் சென்ற விதத்தைக் காட்டுவதற்கான தூர நேர வரைபு ஒன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது.



1. ரவியின் வீட்டிலிருந்து நூலகத்திற்கு உள்ள தூரத்தைக் காண்க.

2. ரவி நூலகத்தில் தரித்து நின்ற காலத்தைக் கணிக்குக.


3. ரவி வீட்டிலிருந்து நூலகத்திற்கு பயணித்த சீரான கதியைக் கணிக்குக.

4. ரவியினுடைய பயணப்பாதைக்கான சராசரிக் கதியைக் கணிக்குக.

5. ரவி நூலகத்திற்குச் செல்லாமல் $20ms^{-1}$ சீரான கதியில் நண்பனின் வீட்டிற்கு செல்வதற்கு எடுக்கும் நேரம் யாது?


www.lkedu.lk

09. பாலன் வீட்டில் இருந்து வங்கிக்கு மோட்டார் வண்டியில் பயணம் செய்த விதம் கீழே தூர - நேர வரைபில் காட்டப்பட்டுள்ளது.



1. பாலனின் வீட்டிலிருந்து வங்கிக்கான தூரம் யாது?
2. மோட்டார் வாகனத்தின் கதி மணித்தியாலத்திற்கு எத்தனை கிலோமீற்றர் என காண்க.
3. பாலன் வங்கியில் செலவழித்த காலம் யாது?
4. அவன் வங்கிக்குச் சென்ற அதே பாதையில் $90kmh^{-1}$ எனும் மாறாக் கதியில் திரும்பி வீட்டை அடைந்தான் எனின் அதனை தூர - நேர வரைபில் காட்டுக.
5. வங்கியில் செலவிட்ட நேரத்தை புறக்கணித்து மோட்டார் வாகனத்தின் சராசரிக் கதியைக் காண்க.

10. ஒரு மாணவன் தனது வீட்டிலிருந்து நண்பனின் வீட்டிற்குச் சென்று பாடசாலைக்குச் சென்ற விதம் தூர - நேர வரைபில் காட்டப்பட்டுள்ளது.



www.ikedu.lk

1. மாணவன் நண்பனின் வீட்டில் தங்கியிருந்த நேரம் யாது?


2. மாணவன் தனது வீட்டிலிருந்து நண்பனின் வீட்டிற்கு பயணித்த கதியை கிலோமீற்றர் / மணித்தியாலத்திற் காண்க.

3. வீட்டிலிருந்து பாடசாலைக்கான மொத்த தூரம் யாது?

4. நண்பனின் வீட்டில் இருந்து பாடசாலைக்குப் பயணித்த கதியை கிலோமீற்றர் / மணித்தியாலத்திற்கு காண்க.

5. மாணவன் முதல் 30 நிமிடத்தில் சென்ற கதியில் பாடசாலைக்கு நண்பனின் வீட்டிற்கு செல்லாமல் சென்றிருந்தால் அதற்குரிய வரைபை இவ்வுரு மீது வரைக.

11.



பூந்தோட்டமொன்று செவ்வகமொன்றையும் அதன் அகலப்பக்கங்கள் வழியே இரு அரை வட்டங்களையும் கொண்டுள்ளது.

1. அரை வட்ட பிரதேசமொன்றின் வில்லின் நீளம் யாது?

2. அரை வட்ட பிரதேசங்கள் இரண்டினதும் பரப்பளவு யாது?

3. பூந்தோட்டத்தின் ஓரம் வழியே நெடுகிலும் 4m இடைவெளியில் கம்பங்கள் நடவேண்டியிருப்பின் தேவையான கம்பங்களின் எண்ணிக்கை யாது?

4. அரை வட்டப் பிரதேசங்களின் பரப்பளவிற்கும் செவ்வகப் பிரதேசத்தின் பரப்பளவிற்கும் இடையிலான விகிதம் 11 : 21 என காட்டுக.

www.lkedu.lk

எண்கள்

சுட்டியும் மடக்கையும்

01. $2^3 = 8$ சுட்டி வடிவில் உள்ளதை மடக்கை வடிவில் தருக.

02. $log_5{}^{125} = 3$ மடக்கை வடிவில் உள்ளதை சுட்டி வடிவில் தருக.

03. $10^{-3} = \frac{1}{1000}$ என்பதை மடக்கை வடிவில் தருக.

04. $\lg 6.85 = 0.8357$ என்பதை சுட்டி வடிவில் தருக.

05. $\lg 0.0732 = \bar{2}.8645$ என்பதை சுட்டி வடிவில் தருக.

06. இடைவெளி நிரப்பி மடக்கை வடிவில் தருக.

$32 = 2^{\square}$

07. மடக்கை வடிவில் தருக.

$3 \times 3 \times 3 \times 3 = 81$

www.lkedu.lk

பின்னங்கள்

01. சுருக்குக.

$\frac{1}{2} + \frac{3}{4} \times 2$

02. சுருக்குக.

$\left(\frac{1}{3} - \frac{1}{4}\right) \div \frac{5}{12}$

03. $3\frac{1}{4} + 2\frac{1}{4} - \frac{1}{3} \times \frac{3}{4}$ இனைச் சுருக்குக.

04. $\left(3\frac{4}{7} \div \frac{5}{14}\right) + \left(2\frac{4}{5} \div \frac{14}{5}\right)$

05. 40cm நீளமுள்ள கம்பியொன்றின் ¼ பகுதியின் நீளம் எவ்வளவு?

www.lkedu.lk

06. ஒரு காணியில் 1/3 பங்கில் வீட்டுத் தோட்டமும் மீதியின் 1/2 பங்கு குத்தகைக்கும் விடப்பட்டது எனின் குத்தகைக்கு விடப்பட்ட காணி மொத்தக் காணியில் என்ன பின்னமாகும்?

07. பிரகாஷ் தனது சம்பளத்தில் 1/2 பங்கை உணவிற்கும் எஞ்சியதின் 2/3 பங்கை சேமிப்பதற்கும் பயன்படுத்தினான் எனின், சேமிப்பில் வைத்தது மொத்த பணத்தின் என்ன பின்னமாகும்?

08. ஒரு நீர்த் தாங்கியிலுள்ள நீரில் 1/4 பங்கு வீட்டுத் தேவைக்கும் மீதியின் 1/3 பூந்தோட்டத்திற்கும் பயன்படுத்தப்பட்டது எனின் பூந்தோட்டத்திற்கு பயன்படுத்தப்பட்ட நீரின் அளவு தாங்கியிலிருந்த நீரின் என்ன பின்னமாகும்?

09. தோட்டத்தில் பறிக்கப்பட்ட ஒரு தொகைத் தேங்காய்களின் 1/5 பங்கு வீட்டுத் தேவைக்கு வைத்துக் கொண்டு மீதியின் 1/2 பங்கு விற்கப்பட்டது எனின், விற்கப்பட்ட தேங்காய்கள் , மொத்தத் தேங்காய்களின் எண்ணிக்கையின் என்ன பின்னம்?

10. ரூபா 100 இன் 1/4 பங்கை செலவு செய்த பின்னர் எஞ்சியுள்ள பணம் எவ்வளவு?

www.lkedu.lk

பகுதி - IB

01. ஒருவர் தன்னிடமுள்ள பணத்தின் 1/5 பங்கை தனது செலவுக்காக வைத்துக் கொண்டு மீதியில் 1/2 பங்கை மனைவிக்கும் எஞ்சியதின் 1/6 பங்கை கோயிலுக்கும் நன் கொடையாக வழங்குகின்றார். பின்னர் எஞ்சிய பணம் ரூ 25 000 ஐ வங்கியொன்றில் வைப்புச் செய்கின்றார்.

1. செலவுக்காக வைத்துக் கொண்ட பின் எஞ்சிய பணம் முழுப்பணத்தின் என்ன பின்னமாகும்?
2. மனைவிக்கு வழங்கியது முழுப்பணத்தின் என்ன பின்னம்?
3. நன்கொடையாக வழங்கப்பட்ட பணம் முழுப்பணத்தின் என்ன பின்னம்?
4. வைப்பிலிட்ட தொகை முழுப்பணத்தின் என்ன பின்னம்?
5. குறித்த நபரிடமிருந்த மொத்தப்பணம் எவ்வளவு?

02. ஒருவர் தனது பயணத்தின் 2/9 பங்கைத் துவிச்சக்கர வண்டியிலும் எஞ்சியதின் 4/7 பங்கை பேரூந்திலும் எஞ்சியதின் 2/3 பங்கை முச்சக்கர வண்டியிலும் கடந்து மிகுதி தூரத்தை நடந்தும் சென்றடைந்தார்.

1. அவரது பயணத்தில் பேரூந்தில் பயணித்த தூரம் முழுத் தூரத்தின் என்ன பின்னமாகும்?
2. முச்சக்கர வண்டியில் பயணித்த தூரம் மொத்த தூரத்தின் என்ன பின்னமாகும்?
3. நடந்து சென்ற தூரம் 5km எனின் நடந்த தூரம் மொத்தத் தூரத்தின் என்ன பின்னமாகும்?
4. அவரது பயணத்திற்கான மொத்தத் தூரத்தை காண்க.

03. நீர்த்தாங்கி ஒன்றிலுள்ள நீரின் வீட்டுப்பாவனைக்காக பின்வருமாறு நீர் பயன்படுத்தப் பட்டது சமையலுக்காக 1/12 பங்கும் குளிப்பதற்காக 1/6 பங்கும் பயன்படுத்தப்பட்டது.

1. இரண்டு தேவைகளுக்குமாகப் பயன்படுத்தப்பட்டது தாங்கியில் உள்ள மொத்த நீரின் என்ன பின்னமாகும்?
2. தற்போது எஞ்சியுள்ள நீர் முழுவதின் என்ன பின்னமாகும்?
3. எஞ்சியதின் 1/2 பங்கு பூந்தோட்டத்திற்கும் பயன்படுத்தப்பட்டது எனின் பயன்படுத்தப்பட்ட நீர் தாங்கியிலுள்ள முழு நீரின் என்ன பின்னம்?
4. எஞ்சியதில் 700*l* நீரானது வீட்டிலுள்ள வாகனங்களைக் கழுவுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பின் தாங்கியில் 1/12 பங்கு நீர் எஞ்சியுள்ளது எனின், தாங்கியில் ஆரம்பத்திலிருந்த நீர் எவ்வளவு லீற்றர்களாகும்?

www.lkedu.lk

04. 1. ஒரு கடையில் உள்ள அரிசியில் 2/9 பங்கு கிராமம் A யில் உள்ள மக்களுக்கு வழங்கப்படுகின்றது எனின் A கிராமத்துக்கு வழங்கிய பின் எஞ்சியது கடையில் இருந்த அரிசியின் என்ன பின்னமாகும்.

2. பின்னர் எஞ்சியதன் 3/7 பங்கை கிராமம் B இற்கு வழங்கப்படுகிறது எனின் கிராமம் B இற்கு கிடைத்த அரிசி கடையில் இருந்த அரிசியின் என்ன பின்னமாகும்?

3. பின்னர் எஞ்சிய அரிசியை C, D, E என்ற மூன்று கிராமங்களுக்கு சம அளவில் வழங்கப்பட்டது எனின் கிராமம் C இற்குக் கிடைத்த அரிசியின் அளவு கடையில் இருந்த அரிசியின் அளவின் என்ன பின்னமாகும்?

4. கிராமம் B இற்கு வழங்கப்பட்ட அரிசி 900kg எனின், கடையில் இருந்த அரிசியின் அளவை மெற்றிக் தொன்னில் தருக.

5. கிராமம் E இற்கு கிடைத்த அரிசியின் அளவு யாது?

05. a. தாங்கியொன்றின் 4/7 பங்கு நீரால் நிரம்பியிருந்தது. நிரம்பாமல் இருக்கும் பகுதியின் 1/3 பங்கை நீரால் நிரம்பினால் தற்போது தாங்கியிலிருக்கும் நீர் முழுத் தாங்கியின் என்ன பின்னம்?

b. கபிலன் தனக்குச் சொந்தமான காணியின் 2/5 ஐ தனது மனைவிக்கும் எஞ்சிய பகுதியை தனது ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் இடையே சமனான பங்கு கிடைக்குமாறு பகிர்ந்தளித்தார்.

1. பிள்ளைகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட காணி, முழுக் காணியின் என்ன பின்னமெனக் காண்க.

2. ஒரு பிள்ளைக்கு கிடைத்த பங்கு முழுக் காணியின 3/20 பங்கு எனின் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

06. சுருக்குக.

a. $\dfrac{\frac{3}{4} \div \frac{1}{3} \text{ இன் } 1\frac{1}{3}}{\frac{3}{4} \div \frac{1}{3} \times 1\frac{1}{3}}$

b. $\left(\frac{1}{7} + \frac{1}{3}\right) \div 1\frac{3}{7}$

c. $\frac{7}{12} - \frac{1}{3}$ இன் $1\frac{1}{2}$

www.ikeduk.lk

07. ரவி தனது காணியில் அரைவாசியை வயல் செய்கைக்கும் மிகுதியை மூன்று சமபகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியை தனக்கும் எஞ்சியதை தனது இரு மகன்களுக்கும் பிரித்துக் கொடுத்தார். பின்னர் அவரது சகோதரனுக்கு வயல் பகுதியில் 1/4 பங்கை வழங்கினார்.

1. சகோதரனுக்கு வழங்கிய பின்னர் ரவி வயல் செய்கைக்கு பயன்படுத்திய நிலப்பகுதி மொத்த நிலப்பரப்பின் என்ன பின்னம்?

2. மகனுக்கு வழங்கியது மொத்த காணியின் என்ன பின்னம்?

3. சகோதரனுக்கு வழங்கியது மொத்தக் காணியின் என்ன பின்னம்?

4. சகோதரனுக்கு வழங்கப்பட்ட காணியின் அளவு 6கெக்ரயர் எனின் மொத்தக் காணியின் அளவை கெக்ரயரில் தருக.

08. பாலன் வெளிநாடு ஒன்றில் பணிபுரிகின்றான். அவர் மாதச் சம்பளத்தினை திட்டமிட்டுச் செலவு செய்கின்றார். தனது மாதச் சம்பளத்தின் 1/6 பங்கை தனது உணவுத் தேவைக்கும் 1/12 பங்கை தனது இதர தேவைகளுக்கும் செலவு செய்கின்றார். மிகுதியை ஊரில் இருக்கும் தனது குடும்பத்திற்கும் அனுப்புகின்றார்.

1. அவர் தனது உணவுத் தேவைக்கும் இதர தேவைகளுக்கும் செலவு செய்யும் பங்கு எவ்வளவு?

2. அவர் குடும்பத்திற்கு அனுப்பி வைக்கும் பங்கு எவ்வளவு?

3. அவருக்கு 1 080 கட்டார் ரியால்கள் சம்பளமாகக் கிடைக்கின்றது எனில் அவர் ஊருக்கு அனுப்பி வைக்கும் பணத்திற்கும் அவரது செலவுகளிற்கும் பயன்படுத்தும் பணத்திற்கும் இடையிலான வித்தியாசம் யாது?

1 கட்டார் ரியால் = ரூ 50

www.lkedu.lk

09. மொத்த வியாபாரி ஒருவர் ஒரு தொகை பலாக் காய்களை விவசாயியிடம் கொள்வனவு செய்து விற்பனை செய்தார். அப் பலாக்காய் தொகுதியில் 1/10 பங்கு பழுதடைந்திருந்தன. எஞ்சியவற்றில் 2/6 பங்கு காய்களாக இருந்தன.

1. பழுத்திருந்த பலாப்பழங்கள் மொத்தத் தொகையின் என்ன பின்னம்?

2. பழுக்காதிருந்த பலாக்காய்களில் 1/3 பங்கு விற்பனை செய்யப்பட்டு விட்டன எனில் அவரிடம் எஞ்சியுள்ள பலாக்காய்கள் மொத்தத்தின் என்ன பின்னம்?

3. பழுத்திருந்த பலாப்பழங்களில் 2/5 பங்கு விற்பனை செய்யப்பட்ட பின்னர் 18 பழங்கள் எஞ்சியிருந்தன எனில் அவர் விவசாயியிடம் கொள்வனவு செய்த பலாக்காய்கள் எத்தனை?

4. ஒரு பலாக்காய் ரூ 80 இற்கு கொள்வனவு செய்திருந்தார் எனில் பழுதடைந்த பலாக்காய்களினால் அவர் அடைந்த நட்டம் யாது? (ரூபாவில்)

10. ரூ 10000 இல் 2/5 பங்கினை கவிதாவிற்கு வழங்கிய பின்னர் மிகுதிப்பணத்தின் 1/6 பங்கினை விமலாவிற்கு வழங்கினார்கள்.

1. கவிதாவிற்கு கிடைத்த பணத் தொகை யாது?

2. விமலாவிற்கு கிடைத்த பணத் தொகை யாது?

3. இருவருக்கும் கொடுத்த பின்னர் எஞ்சிய பணத்துடன் ரூ 300 சேர்க்கப்பட்டு இல்லம் ஒன்றிற்கு அன்பளிப்பாக வழங்கினார்கள். எனில் கவிதாவிற்கு கிடைத்த பணத் தொகை, விமலாவிற்கு கிடைத்த பணத் தொகை, இல்லத்திற்கு வழங்கப்பட்ட பணத் தொகைகளுக்கு இடையிலான விகிதத்தை எளிய வடிவில் தருக.

www.lkedu.lk

கூட்டல் விருத்தி

01. 3, 8, 13, 18, ... , ... எனும் கூட்டல் தொடரின் அடுத்து வரும் இரு உறுப்புக்களையும் எழுதுக.

02. 11 , 9 , 7 , ... , ... எனும் கூட்டல் தொடரின் அடுத்து வரும் இரு உறுப்புக்களையும் காண்க.

03. 7, 10, 13, 16, ... எனும் தொடரின் n ஆம் உறுப்பைக் காண்க.

04. 18, 13, 8, 3, ... எனும் தொடரின் n ஆம் உறுப்பைக் காண்க.

05. $a = 2$, $d = 5$ ஆகவுள்ள கூட்டல் தொடரின் n ஆம் உறுப்பைக் காண்க.

06. $a = -2$, $d = 2$ ஆகவுள்ள கூட்டல் தொடரின் n ஆம் உறுப்பைக் காண்க.

07. பொது உறுப்பு $Tn = 2n + 3$ ஆகவுள்ள கூட்டல் தொடரின் 7 ஆம் உறுப்பைக் காண்க.

www.lkedu.lk

08. பொது உறுப்பு $Tn = 7 - 2n$ ஐ உடைய எண் தொடரின் முதல் முதல் மூன்று உறுப்பையும் காண்க.

09. 5, 10, 20, 40, ... எனும் பெருக்கல் தொடரின் a ,r இனை குறிப்பிடுக.

10. 1, 4, 16, ... எனும் பெருக்கல் தொடரின் அடுத்து வரும் இரண்டு உறுப்புக்களைக் காண்க.

11. $a = 2, r = 4$ ஆகவுள்ள பெருக்கல் தொடரின் 5 ஆம் உறுப்பைச் சுட்டி வடிவில் காண்க.

12. $a = 1/27, r = 3$ ஆகவுள்ள பெருக்கல் தொடரின் n ஆம் உறுப்பைக் காண்க.

13. 1, 3, 9, 27 ..... என்ற பெருக்கல் தொடரில்

1) பொது விகிதம்

2) 7ஆம் உறுப்பு யாது?

14. 2, -4, 8 ..... என்ற பெருக்கல் தொடரில் 7ஆம் உறுப்பு யாது?

www.lkedu.lk

பகுதி - IB

01. ஒரு அலங்கார வேலைக்காக துணி நாடாவொன்றில் இருந்து துண்டுகள் வெட்டப்படுகின்றன. 8cm நீளமான முதலாவது துண்டு வெட்டியதன் பின்னர் வெட்டப்படும் ஒவ்வொரு துண்டும் அதற்கு முன்னர் வெட்டிய துண்டைவிட 5cm அதிகமுள்ளவாறு வெட்டப்படுகின்றது.

1. முதல் மூன்று துண்டுகளின் நீளங்களை எழுதி அது எவ்விருத்தியில் அமைகின்றன என கூறுக.

2. n ஆவதாக வெட்டப்படும் துண்டின் நீளத்துக்கான கோவையைக் காண்க.

3. வெட்டப்படும் துண்டுகளில் வரிசையில் 12வது துணி நாடாவின் நீளம் எவ்வளவு cm?

4. வெட்டப்படும் எத்தனையாவது துண்டு 68cm நீளமுடையதாகக் காணப்படும்?

02. பயிற்சியில் ஈடுபடும் விளையாட்டு வீரன் ஒருவன் முதல் நாள் 20 நிமிடங்களும் இரண்டாம் நாள் 30 நிமிடங்களும் மூன்றாம் நாள் 40 நிமிடங்களும் என்றவாறு தொடர்ச்சியாக பயிற்சியில் ஈடுபடுகின்றான்.

1. முதல் மூன்று நாட்களும் பயிற்சியில் ஈடுபட்ட நேரங்களை எழுதுக.

2. 12 ம் நாள் அவர் எவ்வளவு நேரம் பயிற்சியில் ஈடுபட்டிருப்பார் ?

3. எத்தனையாவது நாள் அவர் மூன்று மணி நேரத்தை பயிற்சிக்காக செலவிடு கின்றார்?

4. 1 ம் கிழமை முடிவில் அவர் மொத்தமாக ஆறு மணித்தியாலங்களிலும் குறைவாக பயிற்சியில் ஈடுபட்டிருப்பார் எனக் காட்டுக.

03. தட்டெறிதல் விளையாட்டில் பங்குபற்றிய வீரன் ஒருவன் முதல் தடவை 4 m , 2ம் தடவை 7m, 3ம் தடவை 10m, என்றவாறு எறிந்தான்.

1. 3 தடைவகளும் அவன் எறிந்த தூரங்கள் ஒரு கூட்டல் விருத்தியில் அமைந்துள்ளது எனக் காட்டுக.

2. பின் எறியும் தூரங்களும் ஒரு கூட்டல் விருத்தியில் அமையுமாயின் n ஆம் தடவை எறியும் தூரத்தை n சார்பில் காண்க.

   a. 8 ம் தடவை எறியும் தூரம் எத்தனை மீற்றராகும் ?

   b. 10 தடவைகள் எறிவான் ஆயின் 10 தடைவைகளும் அவன் எறிந்த மொத்த தூரத்தை மீற்றரில் காண்க.

www.ikeduLK

04. நூலகமொன்றில் பெற்ற புத்தகத்தை வித்யா முதல் நாளில் நான்கு பக்கங்களை வாசித்து முடித்தார். தொடர்ந்து வரும் ஒவ்வொரு நாளும் அதற்கு முதல் நாள் வாசித்த பக்கங்களின் எண்ணிக்கையிலும் பார்க்க 3 பக்கங்களை கூடுதலாக வாசிக்கத் தொடங்குகின்றார் எனின்.

1. அவர் 10 ஆம் நாள் எத்தனை பக்கங்களை வாசித்து முடித்திருப்பார்.

2. குறித்த ஒரு நாளில் அவர் 46 பக்கங்களை வாசித்தார் எனின் அது எத்தனையாவது நாளாகும்.

3. குறித்த புத்தகம் 650 பக்கங்களைக் கொண்டது எனின் எத்தனை நாட்களில் அதனை வாசித்து முடிக்கலாம் ?

4. ரூ 315 பெறுமதியான அப்புத்தகத்தை கொள்வனவு செய்ய விரும்பிய அவர் முதல் நாளில் ரூ 5 ஐ உண்டியலில் இட்டு சேமிக்கத் தொடங்குகின்றார். அதற்கு அடுத்த ஒவ்வொரு நாளும் முன்னைய நாள் இட்ட பணத்தின் இரு மடங்கு பணத்தினை உண்டியலில் இடுகின்றார் எனின் அப் புத்தகத்தை அவர் கொள்வளவு செய்ய எடுக்கும் காலம் யாது?

05. விளையாட்டு விழாவொன்றில் உடற் பயிற்சிக் காட்சியொன்றில் மாணவர்கள் முதலாவது நிரையில் 6 பேரும் அதற்கு அடுத்து ஒவ்வொரு நிரையிலும் 2 பேர் கூடுதலாக இருக்கும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

1. முதல் நான்கு நிரையிலும் உள்ள மாணவர்களை குறிப்பிடுக.

2. 8 ஆவது நிரையில் நிறுத்தப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர்?

3. நிறுத்தப்பட்ட ஒழுங்கினை அவதானித்த ஆசிரியர் ஒருவர் 15 வது நிரைக்கு 34 மாணவர்கள் நிறுத்தப்பட்டிருக்கலாம் என கூறுகின்றார் இக் கூற்று சரியா? தவறா? என காரணத்துடன் விளக்குக.

4. மொத்தமாக 15 நிரைகளில் மாத்திரமே மாணவர்கள் நிறுத்தப் பட்டுள்ளனர் எனின் உடற்பயிற்சிக் காட்சியில் பங்கு பற்றிய மாணவர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

www.lkedu.lk

வேலையும் நேரமும்

01. ஒரு குழாயினூடாக 7 நிமிடத்தில் 420l நீர் வெளியேறுகின்றது எனின் வெளியேறும் நீரின் கதியை செக்கனுக்கு எத்தனை l எனக் காண்க.

02. மோட்டார் வாகனம் ஒன்றில் சீரான கதியில் செல்லும் ஒருவர் 1.5km தூரத்தை 5நிமிடங்களில் கடந்து செல்கின்றார் எனின் அவரது கதியைக் காண்க.

03. ஒரு குழாயினூடாக ஒரு நிமிடத்தில் 180l நீர் வெளியேறுகின்றது எனின் 1 செக்கனுக்கு வெளியேறும் நீரின் கனவளவு யாது?

04. குழாயொன்றினூடாக செக்கனுக்கு 6l நீர் பாய்கின்றது எனின் 1200l கொள்ளளவுடைய தாங்கியொன்றிலுள்ள நீர் முற்றாக வெளியேறுவதற்கு எடுக்கும் நேரத்தை நிமிடங்களில் தருக.

05. ஒரு குழாயினூடாக 5 நிமிடத்தில் 30 ml நீர் வீண்விரயமாகிறது எனின் வெளியேறும் நீரின் கதியை செக்கனுக்கு எத்தனை ml எனக் காண்க.

06. மணிக்கு 300 km சீரான கதியில் பயணம் செய்யும் மோட்டர் வாகனம் ஒன்று பயனிக்கும் கதியைக் காண்க.

www.lkedu.lk

07. 50 kmh^{-1} எனும் சீரான கதியில் பயனித்த ஒருவர் 30 நிமிடத்தில் கடந்த தூரத்தைக் காண்க.

08. உயர் கதி நெடுஞ்சாலையில் 100 kmh^{-1} எனும் கதியில் செல்லும் வாகனம் ஒன்று ஒரு மணித்தியாலயத்தில் கடந்த தூரம் எத்தனை km ?

09. நிமிடத்திற்கு 10l வீதம் பாயும் குழாயின் மூலம் 240l நீர் வெளியேற எடுக்கும் காலம் யாது?

10. ஒரு தொட்டியில் 100l நீர் உள்ளது. அத்தொட்டியில் உள்ள சிறு துவாரத்தினூடாக ஒரு நிமிடத்தில் 2l நீர் வெளியேறுகின்றது எனின் தொட்டியில் உள்ள அரைப்பங்கு நீர் வெளியேற எடுக்கும் நேரம் யாது?

11. நீளம் 12m, அகலம் 8m, உயரம் 6m உடைய கனவடிவத் தொட்டியினுள் 4m உயரத்துக்கு நீர் உள்ளது.

1. நீரின் கனவளவை l இல் காண்க.

2. இவ் நீரானது 48l/மணித்தியாலம் என்ற வேகத்தில் வெளியேறும் குழாயினால் வெளியேற்றப்படின் நீர் வெளியேற எடுக்கும் நேரம் யாது?

www.lkedu.lk

நேர்மாறு விகித சமன்

01. குறித்த ஒரு வேலையை 6 மனிதர்கள் 8 நாட்களில் செய்து முடிப்பார் அவ்வேலையை 3 நாட்களில் செய்து முடிப்பதற்கு தேவையான மனிதர்களின் எண்ணிக்கையைக் காண்க.

02. 9 மனிதர்கள் ஒரு வேலையை செய்து முடிப்பதற்கு 8 நாட்கள் எடுக்கின்றனர். இவ் வேலையில் அரைவாசியை செய்து முடிப்பதற்கு 4 மனிதர்கள் எத்தனை நாட்கள் எடுப்பார்?

03. 10 மனிதர்கள் 6 நாட்களில் வேலையொன்றை செய்து முடிப்பார். 2 நாட்கள் வேலை செய்த பின் இருவர் வேலைக்கு சமூகம் தரவில்லை.

1. இரு நாட்கள் வேலை செய்த பின் எஞ்சிய வேலையின் அளவு எத்தனை மனித நாட்கள் ?

2. எஞ்சிய வேலையை 8 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்?

04. குறித்த வேலையொன்றின் 1/4 பகுதியை நிறைவு செய்வதற்கு 5 மனிதர்களுக்கு 3 நாட்கள் தேவைப்படுகின்றது. 10 மனிதர்களுக்கு இம் முழு வேலையை நிறைவு செய்வதற்கு தேவையான நாட்களின் எண்ணிக்கையைக் காண்க.

05. 6 மனிதர்களுக்கு ஒரு கால்வாயை வெட்டுவதற்கு வெட்டுவதற்கு 4 நாட்கள் எடுக்கும் 3 மனிதர்கள் இரு நாட்கள் வேலை செய்தனர் எனின் எஞ்சிய வேலையின் அளவு எத்தனை மனித நாட்கள்?

www.lkedu.lk

06. 12 மனிதர் 10 நாட்களில் செய்யக் கூடிய வேலையொன்றை மண்வெட்டும் இயந்திரமொன்று 6 மணித்தியாலயங்களில் செய்து முடிக்கின்றது எனின் இந்த இயந்திரம் 1 மணித்தியாலயத்தில் செய்யும் வேலையை மனித நாட்களில் காண்க.

07. ஒரு குறிப்பிட்ட வேலையின் அரைவாசியை செய்து முடிக்க 6 மனிதர்களுக்கு 4 நாட்கள் எடுத்தது மீதி வேலையைச் செய்வதற்கு மேலும் 2 மனிதர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டால் அம் மீதிவேலையைச் செய்து முடிக்க எத்தனை நாட்கள் எடுக்கும்.

08. ஒரு பொறியினால் ஒரு வயலில் அறுவடை செய்வதற்கு 8 மணித்தியாலயங்கள் எடுக்கின்றன அத்தகைய 4 பொறிகளினால் இவ் வயலில் அறுவடை செய்வதற்கு எடுக்கும் நேரம் எத்தனை மணித்தியாலயம் ஆகும்?

09. 8 மனிதர்கள் ஒரு வேலையை செய்து முடிப்பதற்கு 6 நாட்கள் எடுப்பார் என மதிப்பிடப்பட்டுள்ளது அதன் இரு மடங்கான வேலையைச் செய்து முடிப்பதற்கு 12 மனிதர்கள் எடுக்கும் நாட்களின் எண்ணிக்கையைக் காண்க.

10. ஒரு வீட்டின் தீந்தையைப் பூசுவதற்கு 3 மனிதர்கள் 4 நாட்கள் எடுக்கின்றனர் அத்தகைய 10 வீடுகளில் 15 நாட்களில் தீந்தையைப் பூசிமுடிப்பதற்கு எத்தனை மனிதர்கள் ஈடுபட வேண்டும்?

11. ஒரு குறித்த வேலையைச் செய்து முடிப்பதற்கு ஒரு மனிதன் 18 நாட்கள் எடுக்கின்றான் அத்தகைய வேலையை 3 மனிதர்கள் 2நாட்கள் வேலை செய்தால் அவ் லையின் என்ன பின்னத்தை செய்து முடிக்கலாம்.

www.ikeau.lk

01. a. 1. ஒரு கனவுரு வடிவ தொட்டி ஒன்றின் நீளம், அகலம், உயரம் என்பன முறையே 60cm, 50cm, 30cm ஆகும். எனின் தொட்டி கொள்ளக் கூடிய நீரின் கனவளவை ml இல் தருக.

2. அதன் கொள்ளளவை l இல் தருக

.

3. நிமிடத்தில் 10l வீதம் நீர் பாயும் குழாய் மூலம் இத் தொட்டியை முற்றாக நிரப்புவதற்கு எடுக்கும் நேரத்தைக் காண்க.

b. ஒரு வாகனம் $30kmh^{-1}$ எனும் சீரான வேகத்தில் செல்கின்றது எனின் இவ் வாகனம் 5 மணித்தியாலத்தில் செல்லும் தூரம் யாது?

02. பயிர்ச் செய்கைக்காக நிலம் ஒன்றைப் பதப்படுத்துவதற்கு 5 பேருக்கு 8 நாட்கள் தேவைப்படும் என உத்தேசிக்கப்பட்டிருந்தது.

1. நிலத்தைப் பதப்படுத்துவதற்குத் தேவையான மனித நாட்கள் எவ்வளவு?

2. 2 நாட்களில் நிலத்தை பண்படுத்தி முடிப்பதற்கு எத்தனை மனிதர்கள் தேவைப்படுவர்?

5 மனிதர்கள் இணைந்து ஒரு நாளில் செய்யும் வேலையை நிலத்தை பண்படுத்தும் இயந்திரமானது 6 மணித்தியாலங்களில் செய்து முடிக்கின்றது. 4 நாட்களின் பின்னர் 5 மனிதர்களையும் வேலையில் இருந்து இடைநிறுத்தி இயந்திரத்தினால் வேலை செய்யப்படுகின்றது.

3. எஞ்சிய வேலையின் அளவு எத்தனை மனித நாட்களாகும்?

4. குறித்த வேலையானது பூரணமாக எடுத்த நாட்களைக் காண்க.

www.lkedu.lk

எளிய வட்டி, கூட்டு வட்டி

01. மாதம் 5% வீத எளிய வட்டிக்கு ரூபா 5000 ஐக் கடனாகப் பெறும் ஒருவர் 4 மாதங்களின் பின்னர் முழுவதுமான கடனைத் திருப்பிச் செலுத்துகின்றனர் எனின் அவர் கொடுக்க வேண்டிய மொத்த பணம் எவ்வளவு?

02. 8% வீத ஆண்டு வட்டிக்கு ரூ 12000 ஐக் கடனாகப் பெற்ற ஒருவர் 2 வருடத்திற்கு செலுத்த வேண்டிய வட்டி எவ்வளவு?

03. ரூ 50000 இற்கு மூன்று வருட வட்டி ரூ 15000 எனின் வட்டி வீதம் யாது?

04. ரூ 25000 ஐ ஆண்டு வட்டி 15% இற்கு கடனாகப் பெற்ற ஒருவர் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் 36250 ரூ இனைச் செலுத்தி கடனில் இருந்து விடுபடுகின்றார் எனில் அவர் கடனைச் செலுத்தி முடிக்க எடுத்த காலத்தைக் காண்க.

05. 8% ஆண்டு கூட்டு வட்டிக்கு ரூ 10000 ஐக் கடனாகப் பெற்ற ஒருவர் 2 வருட முடிவில் கடனில் இருந்து விடுபட செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

www.lkedu.lk

06. ஆண்டிற்கு 12% கூட்டு வட்டிக்கு ரூ 12000 ஐ வங்கியில் வைப்புச் செய்த ஒருவர் ஒரு வருட இறுதியில் பெறும் தொகை எவ்வளவு?

07. ஆண்டிற்கு 10% கூட்டு வட்டிக்கு ரூ 15000 ஐ கடனாகப் பெற்ற ஒருவர் 2 வருட இறுதியில் கடனில் இருந்து விடுபட செலுத்த வேண்டிய வட்டி எவ்வளவு?

08. ஆண்டுக்கு 8% எளிய வட்டி வழங்கும் வங்கியில் ரூ 2000 ஐ வைப்புச் செய்த நிமாலுக்கு ஓராண்டின் இறுதியில் கிடைக்கும் மொத்தப் பணம் எவ்வளவு?

09. மாதத்திற்கு 5% எளிய வட்டி வழங்கும் வங்கியில் ரூ 500 இனை வைப்புச் செய்த சமீர்க்கு ஓராண்டின் இறுதியில் உள்ள மொத்த பணம் எவ்வளவு?

10. கடனாக ரூ 1000 இற்கு மாதமொன்றிற்கு வட்டியாக ரூ 5 அறவிடப்படுகின்றது எனின் அறவிடும் வருட எளிய வட்டி வீதம் யாது?

11. 24% எளிய வட்டிப்படி ரூ 50000ஐ கடனாகப் பெற்ற ஒருவர் 2வருடம் 5 மாதத்தில் செலுத்தும் மொத்த வட்டி யாது?

www.ikeau.lk

01. சுமதி என்பவர் ரூ 100000 ஐ ஆண்டுக்கு 8% எளிய வட்டிக்குக் கடனாகப் பெற்றுக் கொள்கின்றார்.

1. சுமதி ஒரு வருடத்தில் செலுத்த வேண்டிய வட்டி யாது?
2. சுமதி இரண்டு வருடத்தில் கடனில் இருந்து விடுபடச் செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?
3. சுமதி ரூ 124000 ஐச் செலுத்தி கடனில் இருந்து விடுபடுகின்றார் எனின் அவர் விடுபட எடுத்த காலத்தை காண்க.
4. இதே கடன் தொகையை 2 வருடங்களில் மீளச் செலுத்தி கடனில் இருந்து விடுபடுகின்றார் எனின் அதற்கான வட்டி வீதம் யாது?

02. ரஜீவ் ரூ 50000 இன் 1/2 பங்கை வங்கியில் வைப்புச் செய்கின்றார். பின்னர் ரூ 10000 ஐ ரமேஸ்க்கு ஆண்டுக்கு 12% எளிய வட்டிக்கு கடனாகக் கொடுக்கின்றார்.

1. வங்கியில் வைப்புச் செய்த தொகை யாது?
2. வங்கி ஆண்டுக்கு 8% கூட்டு வட்டி வழங்குமெனின் இரண்டு வருட முடிவில் வைப்பிலுள்ள பணம் எவ்வளவு?
3. ரமேஸ் 2 வருடங்களின் இறுதியில் வட்டியுடன் மொத்தப் பணத்தையும் ரஜீவிடம் கையளிக்கின்றார் எனின்
   a. ரமேஸ் கொடுத்த மொத்தப் பணம் எவ்வளவு?
   b. இரண்டு வருட இறுதியில் ரஜீவ் இடம் உள்ள மொத்த பணத்தை காண்க.

03. சீலன் ஆண்டுக்கு 10% கூட்டுவட்டிக்கு ரூ 50000 ஐ 2 வருடங்களுக்கு கடனாகப் பெறுகின்றார்.

1. 2 வருட முடிவில் கடனை அடைப்பதற்கு செலுத்த தேவையான வட்டி எவ்வளவு?
2. கடனை அடைப்பதற்கு செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு? இதே கடனை 11% வருடாந்த எளிய வட்டிக்கு மாறன் பெற்றுக் கொள்கின்றான்.
3. 2 வருட முடிவில் மாறன் செலுத்த வேண்டிய வட்டி எவ்வளவு?
4. இருவரும் 2 வருட முடிவில் கடனில் இருந்து மீள்கின்றனர் எனின், குறித்த கடனை எவ்வட்டி முறையில் பெறுவது இலாபகரமானது? உமது விடைக்கான காரணம் யாது?

www.lkedu.lk

04. சுகுமார் வங்கி ஒன்றில் 50000 ஐ ஆண்டுக்கு 15% எளிய வட்டிக்கு கடனாகப் பெற்றார். அதே வங்கியில் சிவகுமார் ரூ 60000 ஐ ஆண்டுக்கு 12% எளிய வட்டிக்கு கடனாகப் பெற்றுக் கொள்கின்றார்.

1. ஒரு வருட முடிவில்.

   a. சுகுமார் செலுத்த வேண்டிய வட்டி யாது?

   b. சிவகுமார் செலுத்த வேண்டிய வட்டி யாது?

2. 2 வருட முடிவில் சிவகுமார் கடனில் இருந்து விடுபடுகின்றார் எனின் செலுத்த வேண்டிய மொத்த தொகை எவ்வளவு ?

3. சுகுமார் ரூ 65000 இனைச் செலுத்தி கடனில் இருந்து விடுபடுகின்றார் எனின் கடனில் இருந்து விடுபட எடுத்த காலத்தைக் காண்க.

05. குறித்த கடன் வழங்கும் நிறுவனம் ஒன்றில் திவ்யா ஆண்டுக்கு 10% எளிய வட்டிக்கும் சத்யா ஆண்டுக்கு 10% கூட்டுவட்டிக்கும் ரூ 150 000 ஐ இருவரும் கடனாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

1. ஒரு வருட முடிவில் இருவரும் செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

2. இரண்டு வருட முடிவில் இருவரும் கடனில் இருந்து விடுபடுகின்றார். எனின் திவ்யா, சத்யா இருவரும் செலுத்த வேண்டிய வட்டிப் பணத்தை தனித் தனியே குறிப்பிடுக.

3. குறித்த கடன் வழங்கும் நிறுவனத்தில் 2 வருட முடிவில் அதிக தொகையை கையளித்து கடனில் இருந்து விடுபடுபவர் யார்?

4. இந் நிறுவனத்தில் நீர் கடன் பெற இருப்பின் எவ் வட்டி முறையில் கடன் பெற விரும்புவீர் ? உமது விடைக்கான காரணம் யாது?

www.lkedu.lk

பங்குகள்

01. பங்கொன்றிற்கு ரூ 6 வழங்கும் கம்பனியொன்றில் பங்குரிமையுள்ள ஒருவர் ஓராண்டின் பின் ரூ 15000 ஐ பங்குலாபமாகப் பெறுகிறார் எனின், அவரிடமுள்ள பங்குகளின் எண்ணிக்கை யாது?

02. ரூ 12 உடைய பங்குகளை கொள்வனவு செய்ய கம்பனியொன்றில் குறித்த தொகையை முதலீடு செய்யும் ஒருவர் பங்குலாபமாக வருட இறுதியில் ரூ 240 ஐ பெறுகிறார் அது அவரது முதலீட்டின் 4% எனின் அவர் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை யாது?

03. நபரொருவர் சந்தை விலை ரூ 25 ஆன 1000 பங்குகளை கொள்வனவு செய்து ஒரு வருடத்தின் பின்னர் ஒரு பங்கு ரூ 40 வீதம் விற்பனை செய்கின்றார் எனின் அவர் பெறும் மூலதன இலாபத்தைக் காண்க.

04. கம்பனி யொன்றில் 500 பங்குகளில் உரிமையுள்ள ஒருவர் ஓராண்டின் இறுதியில் ரூ 5000 ஐ பங்குலாபமாகப் பெறுகின்றார் எனின் பங்கொன்றிக்கு கம்பனி வழங்கிய பங்குலாபம் எவ்வளவு?

05. ஒருவர் தன்னிடமுள்ள பங்குகளை ரூ 80000 இற்கு விற்பதன் மூலம் ரூ 10000 ஐ மூலதன இலாபமாகப் பெற்றார் எனின் அவர் கம்பனியில் முதலீடு செய்த மொத்தப் பணம் எவ்வளவு?

www.lkedu.lk

06. சந்தை விலை 10 ரூ ஆகவுள்ள பங்குகளைக் கொள்வனவு செய்யும் ஒருவர் முதலீடு செய்த தொகை ரூ 30000.00 ஆகும். அவர் கொள்வளவு செய்த பங்குகளின் எண்ணிக்கை யாது?

07. பங்கொன்றின் சந்தைவிலை ரூ 25.00 ஆகவுள்ள பங்குகளை கொள்வனவு செய்வதற்காக 75000.00 ரூபாவை முதலீடு செய்கிறார். 27 ரூபா ஆகும் போது பங்குகள் அனைத்தையும் விற்பனை செய்கிறார் எனின் அவருக்குக் கிடைக்கும் இலாபம் யாது?

08. ஒருவர் தன்னிடம் 50000.00 ரூபா தொகையில் 2/5 பங்கை சந்தை விலை ரூ 20.00 ஆகவுள்ள பங்குகளை கொள்வனவு செய்கிறார் எனின் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கையைக் காண்க.

09. பங்கொன்றிற்கு 2.00 ரூபா பங்குலாபம் வழங்கப்படும். சந்தை விலை ரூ 15.00 ஆகவுள்ள பங்குகளை கொள்வனவு செய்த ஒருவருக்கு வருட முடிவில் பங்குலாபமாக 2000.00 ரூபா கிடைத்தது எனின் அவர் முதலிட்ட தொகையைக் காண்க.

10. கம்பனி ஒன்றில் ஒவ்வொன்றும் 10.00 ரூபா சந்தைப் பெறுமானம் உள்ள 500000 பங்குகளைக் கொண்டுள்ளது. அக் கம்பனியில் A என்பவர் 1000 பங்குகளை கொள்வனவு செய்கின்றார் எனின் அவரது உரிமைச் சதவீதத்தைக் காண்க.

www.lkedu.lk

01. பங்கொன்றின் விலை ரூ 12 ஆகவுள்ள கம்பனி ஒன்றில் ஒருவர் ரூ 24000 ஐ முதலீடு செய்கின்றார்.

1. அவர் கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை யாது?
2. கம்பனி பங்கொன்றிக்கு ரூ 3 இனை பங்குலாபமாக வழங்குகிறது எனின் அவருக்கு கிடைக்கும் பங்கு இலாபத்தைக் காண்க.
3. பங்கின் சந்தை விலை ரூ 15 ஆக உயர்ந்தது எனின் அவருக்கு கிடைக்கும் மூலதன இலாபத்தைக் காண்க.
4. அவர் பங்குகளை மேற்குறித்த சந்தை விலைக்கு விற்றார் எனின் அவருக்கு கிடைத்த பங்கு இலாபத்தையும், மூலதன இலாபத்தையும் முதலீட்டின் சதவீதமாகத் தருக.

02. குறித்த கம்பனி ஒன்றில் பங்கொன்றின் விலை ரூ 20 ஆகும். கம்பனியானது வருடமொன்றிற்கு ஒரு பங்கிற்கு ரூ 2 பங்குலாபத்தை வழங்குகின்றது சமீர் இக் கம்பனியில் பங்குகளை வாங்குவதற்கு ரூ 30 000 இனை முதலீடு செய்தார்.

1. சமீர்க்கு கிடைக்கும் பங்குகளின் எண்ணிக்கையைக் காண்க.
2. சமீர் கிடைத்த பங்குகளுக்காக ஒரு வருடத்தில் கிடைக்கும் பங்குலாபம் எவ்வளவு?
3. இக் கம்பனியின் பங்குகளை வைத்திருக்கும் சமீருக்கு ஒரு வருடத்தின் பின்னர் பங்கு இலாபமாக ரூ 1800 கிடைக்கின்றது எனின் அவர் இக் கம்பனியில் வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கை யாது?
4. சமீர் இக் கம்பனியில் முதலீடு செய்த பணம் எவ்வளவு?

03. ரஞ்சித் என்பவர் கம்பனி ஒன்றின் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு ரூ 40000 ஐ முதலீடு செய்கிறார். அக் கம்பனியின் பங்கொன்றின் சந்தை விலை ரூ 40 ஆக இருந்தது.

1. அவர் கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை யாது?
2. பங்கொன்றிற்குக் கிடைக்கும் ஆண்டு பங்குலாபம் ரூ 4 எனின் அவருடைய ஆண்டு வருமானம் எவ்வளவு?
3. இரண்டாவது வருடத்தில் பங்குகளினால் கிடைத்த ஆண்டு வருமானம், முதல் வருட ஆண்டு வருமானத்தை விட 50% இனால் கூடியது எனின் இரண்டாவது வருடம் கிடைத்த பங்குலாபம் எவ்வளவு?
4. இரண்டாவது வருடம் பங்கொன்றுக்கு கிடைக்கும் பங்குலாபம் எவ்வளவு?

www.ikedu.lk

04. பங்கொன்றின் விலை ரூ 500 ஆகவுள்ள கம்பனியில் 100 பங்குகளுக்கு மேல் கொள்வனவு செய்யும் போது பங்கு ஒன்றிற்கு ரூ 50 ஐ பங்குலாபமாகவும், 100 பங்குகளுக்கு குறைவாக கொள்வனவு செய்யும் போது பங்கொன்றிற்கு ரூ 40 ஐ பங்குலாபமாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

1. A என்பவர் 150 பங்குகளைக் கொள்வளவு செய்யும் போது பெற்றுக் கொள்ளும் ஆண்டு வருமானத்தைக் காண்க.

2. B என்பவர் அதே கம்பனியில் ரூ 30000 ஐ முதலீடு செய்கிறார் எனின் அவர் கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை எவ்வளவு?

3. B பெற்ற பங்குலாபம் எவ்வளவு?

4. வருட முடிவில் A உம் B உம் தம்மிடமுள்ள எல்லா பங்குகளையும் A ரூ 550 இற்கும் B ரூ 600 இற்கும் விற்பனை செய்தனர் எனின் A, B பெறும் மூலதன இலாபங்களைக் காண்க.

05. விமலன் பங்கொன்றின் சந்தை விலை ரூ 10 ஆகவுள்ள கம்பனி ஒன்றின் பங்குகளைக் கொள்வனவு செய்ய ரூ 25000 ஐ முதலீடு செய்கின்றார். கம்பனி பங்கொன்றிற்கு ரூ 4 ஐ பங்குலாபமாக வழங்குகின்றது.

1. விமலன் கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை யாது?

2. ஒரு வருட முடிவில் விமலன் பெற்ற பங்குலாபம் எவ்வளவு?

3. வருட இறுதியில் எல்லா பங்குகளையும் விற்பனை செய்ய விரும்பியவர் தனக்கு நட்டம் ஏற்படாதிருக்க இம் முதலீட்டில் பங்கொன்றை விற்க வேண்டிய மிகக் குறைந்த விலை யாது?

4. கம்பனியின் சந்தை விலைக்கே தனது பங்குகளை விற்பனை செய்வதால் இம் முதலீட்டின் வருட இறுதியில் அவர் அடையும் நட்டம் எவ்வளவு?

www.lkedu.lk

வரிகள்

இறைவரி

01. ரூபா 100000 ஆண்டுப் பெறுமானம் உள்ள வீடு ஒன்றிற்கு 4% இறைவரி அறவிடப்படுகிறது எனின்
    1. ஆண்டு இறைவரியைக் காண்க.
    2. காலாண்டு வரியைக் காண்க.

02. கடைத் தொகுதி ஒன்றின் ஆண்டுப் பெறுமானம் ரூபா 75000 ஆகும். பிரதேச சபையானது ஆண்டு இறை வரியாக 6% ஐ அறவிடுகிறது எனின் காலாண்டு வரியைக் காண்க.

03. 8% இறைவரியை அறவிடும் நகரசபையின் கீழ் உள்ள விடுதி ஒன்றிற்கான காலாண்டு வரியாக ரூபா 1000 ஐ செலுத்த வேண்டும் எனின்
    1. ஆண்டு இறைவரியைக் காண்க.
    2. விடுதியின் ஆண்டுப் பெறுமானம் யாது?

04. ரூபா 200000 ஆண்டுப் பெறுமானம் உள்ள காணி ஒன்றிற்கு காலாண்டு வரியாக ரூபா 2500 ஐச் செலுத்த வேண்டும் எனின் ஆண்டு வரிச் சதவீதத்தைக் காண்க.

தீர்வை

05. ரூபா 120000 பெறுமதியான கணினி ஒன்றை இறக்குமதி செய்யும் போது 30% தீர்வை செலுத்த வேண்டும் எனின் செலுத்த வேண்டிய தீர்வைப் பணத்தைக் காண்க.

www.lkedu.lk

06. ரூபா 500000 பெறுமதியான தளபாடத் தொகுதி ஒன்றை இறக்குமதி செய்யும் போது 40% தீர்வை செலுத்த வேண்டும். தீர்வை செலுத்திய பின் தளபாடத் தொகுதியின் பெறுமதியைக் காண்க.

07. ரூபா 400000 பெறுமதியான மோட்டார் வாகனம் ஒன்றை இறக்குமதி செய்யும் போது ரூபா 10000 தீர்வை செலுத்தப்படுகின்றது. எனின் தீர்வைச் சதவீதத்தைக் காண்க.

08. ரூபா 60000 பெறுமதியான ஆடைத் தொகுதி ஒன்றிற்கு தீர்வை செலுத்திய பின் அதன் பெறுமதி ரூபா 78000 ஆகக் காணப்பட்டது.

1. செலுத்திய தீர்வையைக் காண்க.
2. தீர்வைச் சதவீதம் யாது?

09. அழகுசாதனப் பொருட்களை இறக்குமதி செய்யும் போது 50% தீர்வை செலுத்த வேண்டும். தீர்வைக்குப் பின் அதன் பெறுமதி ரூபா 180000 எனின் தீர்வை செலுத்த முன் அதன் பெறுமதியைக் காண்க.

வருமான வரி

10 - 14 வரையான வினாக்களுக்கு இவ் அட்டவணையைப் பயன்படுத்துக.

வருமானம்	சதவீதம்
முதல் 500 000/=	வரிவிலக்கு
அடுத்த 500 000/=	4%
அடுத்த 500 000/=	6%
அடுத்த 500 000/=	8%

www.lkedu.lk

10. ஒருவரது ஆண்டு வருமானம் 600000 ஆகும். அவர் செலுத்த வேண்டிய வருமான வரியைக் காண்க.

11. தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் கமலன் ஆண்டு வருமானம் 1200000 ஆகும். அவர் செலுத்த வேண்டிய வருமான வரியைக் காண்க.

12. கடை உரிமையாளரின் வருட வருமானம் 1750000 ஆகும். அவர் செலுத்த வேண்டிய வருமான வரியைக் காண்க.

13. நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் நிமலன் வருமான வரியான ரூபா 16000 ஐச் செலுத்துகிறார். நிமலின் ஆண்டு வருமானத்தைக் காண்க.

14. ஒருவர் வருமான வரியாக ரூபா 35000 ரூபாவை செலுத்துகிறார் எனின் அவரது ஆண்டு வருமானத்தைக் காண்க.

www.lkedu.lk

பெறுமதி சேர் வரி (வற் வரி)

15. ரூபா 2000 பெறுமதியான மின்சாரக் கட்டணச்சிட்டை ஒன்றிற்காக 15% வற்வரி செலுத்த வேண்டும் எனின் செலுத்த வேண்டிய மொத்தப் பெறுமதியைக் காண்க.

16. 15% பெறுமதி சேர் வரியுடன் ரூபா 4600 ஐ தொலைபேசிக் கட்டணமாகச் செலுத்த வேண்டும் எனின் வற் வரி இன்றி தொலைபேசிக் கட்டணத்தின் பெறுமதி யாது?

வரி தொடர்பான பயிற்சிகள்

01. ஆண்டுப் பெறுமானம் 30000 என மதிப்பிடப்பட்ட வீடு ஒன்றிற்கு இறைவரித்திணைக்களம் 8% ஆண்டு வரியை அறவிடுகின்றது. விமல் என்பவர் தனது வீட்டை ரூபா 2000 வீதம் மாத வாடகைக்கு வழங்கி பெறப்படும் வாடகைப் பணத்தில் இருந்து வரியைச் செலுத்துகிறார் எனின் வருட இறுதியில் அவருக்குக் கிடைக்கும் வருமானம் யாது?

02. கடை ஒன்றின் உரிமையாளர் காலாண்டு வரியாக 1500 ஐச் செலுத்துகிறார். அவர் அக் கடையினை மாதாந்தம் ரூபா 2000 இற்கு வாடகைக்கு வழங்கி பெறப்படும் ஆண்டு வாடகைப் பணத்தில் இருந்து 3/10 ஐ கடைத் திருத்தத்திற்கும் ஆண்டு வரியையும் செலுத்துகின்றார் எனின் அவரது வருமானம் எவ்வளவு?

03. 200000 ரூபா பெறுமதியான சலவை இயந்திரம் ஒன்றை இறக்குமதி செய்யும் போது 75% இறக்குமதி தீர்வை அறவிடப்படுகிறது. தீர்வைக்குப் பின்னர் பொருளின் பெறுமதியைக் காண்க.


04. 75000 பெறுமதியான தையல் இயந்திரம் ஒன்றை இறக்குமதி செய்யும் போது 25% தீர்வை செலுத்த வேண்டும். அதன் பின்னர் விற்பனை நிலையத்திற்கு கொண்டு வருவதற்கான செலவு 10000 ரூபா. அத்துடன் பொருளுக்கு 10% இலாபத்துடன் விற்பனை செய்வதற்கு குறித்த விலையைக் காண்க.

www.ikedu.lk

ஒழுக்குகள்


01. A, B என்னும் இரு புள்ளிகள் ஒன்றுக்கொன்று 10cm இடைத்தூரத்தில் அமைந்துள்ளன. AX = BX ஆகுமாறு X என்னும் புள்ளி அசைகின்றது. புள்ளி X இன் ஒழுக்கை பரும்படிப்படத்தில் காட்டுக.

02.



ABCD என்பது செவவ்வக வடிவிலான சுற்றுமதில் உடைய புற்காணியாகும். காணியினுடைய மூலை A இல் 14m நீளமான கயிற்றில் மாடு கட்டப்பட்டுள்ளது. மாடு மேயக் கூடிய பகுதியை ஒழுக்குகள் பற்றிய அறிவைக் கொண்டு நிழற்றிக் காட்டுக.

03.




செவவ்வக வடிவக் காணி PQRS இனுள் எல்லையின் PQ, PS இலிருந்து சம தூரத்திலும் P இலிருந்து 10m தூரத்திலும் மரங்கள் நடவேண்டியுள்ளது. ஒழுக்குகள் பற்றிய அறிவைப் பயன்படுத்தி வரைக.

04.



P, Q என்பன 10m இடைத்தூரத்தில் உள்ள இரு மரங்களாகும். PQ இலிருந்து 5m தூரத்திலும் P, Q இலிருந்து சம தூரத்திலும் உள்ள புள்ளியில் கிணறு ஒன்றை அமைக்க வேண்டியுள்ளது. கிணறு அமையும் இடத்தை ஒழுக்குகள் பற்றிய அறிவைப் பயன்படுத்தி காண்க. (ஒழுக்கானது PQ இற்கு மேலே அமைந்துள்ளது)


05.



XYZ என்பது சமபக்க முக்கோணி வடிவிலான மணல் தரையாகும். XY, XZ இலிருந்து சம தூரத்திலும் YZ, XY இலிருந்து சமதூரத்திலுள்ள புள்ளியை இனங்காண ஒழுக்குகள் பற்றிய அறிவைப் பயன்படுத்தி குறிக்க.


www.ikeou.lk

06. தரப்பட்ட உருவில் கோடு BC இற்கு 5cm தூரத்திலும் புள்ளி A இற்கு 4cm தூரத்திலும் இருக்கும் புள்ளியைக் காண்பதற்குத் தேவையாக அமைப்புக் கோடுகளின் பரும்படி வரிப்படத்தினை வரைந்து அப் புள்ளியை P எனக் குறிக்க.




07. 4cm ஆரையுடைய O ஐ மையமாகக் கொண்ட வட்டத்தின் B, C என்பன பரிதியில் உள்ள இரு புள்ளிகள் B, C ஆகிய இரு புள்ளிகளிலிருந்து சம தூரத்திலும் O இலிருந்து 4cm தூரத்திலும் உள்ள புள்ளிகள் X, Y ஐ ஒழுக்குகள் பற்றிய அறிவைப் பயன்படுத்திக் காண்க.

08.




உருவில் 7cm ஆரையுடைய கால் வட்ட ஆரைச்சிறை ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. A யிலிருந்து 7cm தூரத்திலும் B, C யிலிருந்து சமதூரத்தில் உள்ள புள்ளி X இன் அமைவை ஒழுக்குகள் பற்றிய அறிவைக் கொண்டு காண்க.

09.



உருவில் OAB என்ற முக்கோணி உருவில் காணப்படுகின்றது. OA, OB யிலிருந்து சம தூரத்திலும் O, B ஆகிய புள்ளி களிலிருந்து சமதூரத்தில் உள்ளதும், முக்கோணிக்குள் அமைந்த புள்ளி P யினை ஒழுக்குகள் பற்றிய அறிவைக் கொண்டு காண்க.


10.




O ஐ மையமாகவும் 10cm ஆரையுடைய வட்டம் ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. O விலிருந்து 10cm தூரத்தில் உள்ளதும் விட்டம் AB யிலிருந்து 7cm தூரத்தில் உள்ளதுமான புள்ளிகள் P, Q, R, S இன் அமைவை ஒழுக்குகள் பற்றிய அறிவைக் கொண்டு காண்க.

www.ikedu.lk


முக்கோணிகள்

01. 


முக்கோணம் PQR இல் x இன் பெறுமானம் காண்க.

02. 


x இன் பெறுமானத்தைக் காண்க.

03. 


a ஐக் காண்க.

04. 

x ஐக் காண்க.


05. 

x ஐக் காண்க.


06. 

உருவில் உள்ள தரப்பட்டுள்ள தகவல்களுக்கு ஏற்ப x இன் பெறுமானத்தைக் காண்க.


www.lkedu.lk

07. 


உருவில் உள்ள தகவல்களைக் கொண்டு கோணம் x ஐக் காண்க.

08. 


உருவில் உள்ள தகவல்களைக் கொண்டு ΔABC இன் விசேட பெயர் யாது?

09. 

$Q\hat{P}R$ ஐக் காண்க.


10. 

உருவில் உள்ள தரவுகளிலிருந்து $S\hat{Q}R$ ஐக் காண்க.


11. 

$A\hat{B}C$ இன் பருமன் யாது?


www.lkedu.lk

12. 


ABC ஓர் நேர்கோடு எனில் உருவில் தரப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி இருசமபக்க முக்கோணி இரண்டை இனங்காண்க.

13. 


Δ ABC இல் தரப்பட்ட தகவல்களுக்கேற்ப $(p + q)$ இன் பெறுமானம் யாது?

14. 

தரப்பட்ட தகவல்களுக்கேற்ப x இன் பருமன் யாது?

15. 

உருவில் தரப்பட்ட தகவல்களுக்கேற்ப x இன் பருமன் யாது?


16. 


உருவில் தரப்பட்ட தகவல்களுக்கேற்ப x இன் பருமன் யாது?


www.lkedu.lk

ஒருங்கிசைவு

01.









மேலே தரப்பட்டுள்ள முக்கோணிகளில் ஒருங்கிசையும் முக்கோணச் சோடிகளை இனங்கண்டு எழுதி அவை ஒருங்கிசையும் சந்தர்ப்பங்களையும் எழுதுக.

02.




Δ PQR, Δ ABC என்பன ஒருங்கிசையும் சந்தர்ப்பத்தை குறிப்பிடுக.

03.




Δ ABC, Δ CDE என்பன ப.கோ.ப என்ற சந்தர்ப்பத்தில் ஒருங்கிசைய சமனாக வேண்டிய பக்கச் சோடியைக் குறிப்பிடுக.

04.



Δ PQR, Δ PRS என்பன ஒருங்கிசையும் சந்தர்ப்பமாக அமையாத சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.


05.



Δ LMN, Δ PQO என்பன ஒருங்கிசைவதற்கு சமனாக வேண்டிய நீளங்களைக் குறிப்பிடுக.

www.lkedu.lk


06.




உருவில் BF = CD ஆகும். Δ ABC, Δ DFE என்பன ஒருங்கிசையும் சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.


07. உருவில் உள்ள தரவுகளுக்கேற்ப Δ PQR, Δ PQS ஒருங்கிசையும் சந்தர்ப்பத்தை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. ப . ப . ப
2. ப . கோ . ப
3. கோ . கோ . ப
4. செ.ப . ப




08. இரு முக்கோணிகளும் கோணம் கோணம் ஒத்த பக்கம் எனும் நிபந்தனையின் கீழ் ஒருங்கிசைவதால் PR̂Q இன் பருமன் யாது?





09.



இவ்விரு முக்கோணிகள் ABC, PQR கள்

1. ப.கோ.ப விதிப்படி ஒருங்கிசையின் சமனாக இருக்க வேண்டிய பக்கச் சோடி.
2. கோ.கோ.ப விதிப்படி ஒருங்கிசையின் சமனாக இருக்க வேண்டிய கோணச் சோடி?


www.lkedu.lk

வட்ட நாண்கள்

01. இடைவெளி நிரப்புக.

வட்டத்தின் ..... இருந்து நாணுக்கு வரையப்படும் .....
அந்நாணை இருசம கூறிடும்.

02.




அருகில் உள்ள உருவானது O ஐ மையமாகவுடைய வட்டாகும். வரிப்படத்தில் தரப்பட்ட தகவல்களைக் கொண்டு முடிவுகளுக்கு "✓", "×" என பொருத்தமாக அடையாளமிடுக.

1	OX ⊥ AB ஆகும்.	
2	AX = BX ஆகும்.	
3	AB < BX ஆகும்.	

03. இடைவெளி நிரப்புக.

வட்டமொன்றின் ..... நாணின் .....
இணைக்கும் கோடு அவ் நாணுக்கு செங்குத்தாகும்.


04.



O ஐ மையமாகக் கொண்ட வட்டத்தின் நாண் PQ இன் நடுப்புள்ளி R ஆகும். பின்வருவனவற்றில் சரியானதை "✓" எனவும் பிழையானதை "×" எனவும் இடுக.

1	OR ⊥ PQ ஆகும்.	
2	OR = PR = RQ ஆகும்.	


05.



O ஐ மையமாகக் கொண்ட வட்டத்தில் AB = 24cm, OC = 5cm எனின் வட்டத்தின் ஆரை யாது?


www.lkedu.lk

06.




O வட்டத்தின் மையம் PX = QX ஆகும். OX = 8cm உம், OP = 10cm எனின் PQ ஐக் காண்க.

07.




